10.03.2021
O.S.No.107/2019

வா. சா. 2 ராஜரத்தினம் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை

தாவாச்சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் சர்வே எண் 1954/1 பி ஆகும். தாவாச்சொத்தின் பழைய சர்வே எண் தெரியாது. தாவாச் சொத்து ஆரம்பத்தில் யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் லட்சுமக்கோணார் வகையறாவுக்கு பாத்தியப்பட்டது என்றும் லட்சுமணக்கோணார் வகையறா பேரில் ஆண்டியப்பபிள்ளை நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு 1940 ல் ஏலம் எடுத்தார். இ.பி.எண் நினைவில்லை. லட்சுமணக்கோணார் வகையறா யார் யார் என்ற விவரம் தெரியுமா என்றால் சந்திரன் கோணார், வெள்ளைச்சாமி, ராஜாங்கம், ரோகிணி, பஞ்சவர்ணம், மாப்பிள்ளைசாமி, ஜெயலட்சுமி ஆவார்கள். ஆண்டியப்ப பிள்ளை எந்த எந்த சொத்துக்களைப் பொருத்து வழக்கு தாக்கல் செய்தார் என்றும், எந்த நம்பரில் வழக்கு தாக்கல் செய்தார் என்ற விவரம் தெரியாது. ஆண்டியப்ப பிள்ளை தாக்கல் செய்த வழக்கில் என்ன பரிகாரம் கேட்டிருந்தார் என்றும் எந்த தேதி தீர்ப்பானது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. ஆண்டியப்ப பிள்ளை தாக்கல் செய்த வழக்கில் ஏற்பட்ட தீர்ப்புரை தீர்ப்பாணை ஆகியவற்றை பார்த்தேனா என்றால் நாங்கள் கிரையம் வாங்கும்போது நகல் கொடுத்தார்கள். சான்றிட்ட நகல் கொடுத்தார்களா என்றால் ஜெராக்ஸ் நகல் கொடுத்தார்கள். வாதி டி.என்.1954/1 பிக்கு கட்டுப்பட்ட 7 ம் நம்பர் மனையின் பாதி சொத்துக்காக வழக்கு போட்டுள்ளார். நிரூபண வாக்குமூலத்தில் தாவாச்சொத்து உட்பட 12 மனைகளாக பிரித்தார்கள் என்றும் அதில் 7 ம் நம்பர் மனையின் பாதியை பொறுத்து ஆண்டியப்ப பிள்ளை வாசிமலைக்கு பவர் கொடுத்ததாக சொல்லி உள்ளேன் என்றால் சொல்லி உள்ளேன். ஆண்டியப்ப பிள்ளை வாசிமலைக்கு கொடுத்த பொது அதிகார ஆவணத்தை நான் பார்த்துள்ளேன். வாசித்து பார்க்கவில்லை. அந்த வாதசாஆ.3 ல் தாவாச்சொத்தின் பிளாட் நம்பர்

குறிப்பிடவில்லை என்றால் தெரியாது. இ.பி.யில் ஆண்டியப்ப பிள்ளை ஒப்படைப்பு பெற்ற நீதிமன்ற ஆவணங்களை நான் பார்க்கவில்லை. டி.எஸ்.1954/1 பியில் நான் ஒரு மனையை கிரையம் பெற்றேன். கிரையம் வாங்கும்போது என்ன என்ன ஆவணம் பார்த்தேன் என்றால் ஒப்படைப்பு ஆவணம், சுந்தரேசனுக்கு எழுதிக்கொடுத்த கிரையம் ஆவணம் ஆகியவற்றை பார்த்தேன். ஆண்டியப்ப பிள்ளை வீட்டு மனைகளாக பிரித்தபோது 12 மனைகளாக பிரித்தார். ஆண்டியப்ப பிள்ளை ச.எண்.1954/1 பி, 1958/1 ஆக இரண்டு நிலங்களை மனையடியாக பிரித்தார். 12 மனைகள் எந்த எந்த மனைகள் எந்த எந்த சர்வே எண்ணுக்கு கட்டுப்பட்டது என்று தெரியுமா என்றால் தெரியாது. நான் வாங்கியது ச.எண்.1954/1 பி ஆகும். வாதியின் சொத்துக்கு வடக்கே ஸ்கீம் ரோடு உள்ளது. அதுபோல் ஸ்கீம் ரோடு இல்லை என்றும் நிலம்தான் உள்ளது என்றும் நான் தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நானும் வாதியும் உரிமை இல்லாத நபரிடம் கிரையம் பெற்றுள்ளோம் என்றும் அதனால்தான் வாதிக்கு ஆதரவாக பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை

Sd. M.K.Jamuna,
Prl.Sessions Judge,
Dindigul